உ

தமிழ்த்தாய் வாழ்க

சென்னைமாநில முதலமைச்சர்

## ச. இராசகோபாலாச்சாரியார்

அவர்களிடத்து

வெண்கோழியுய்த்த

# காக்கை விடுதூது



தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது

—

1939

உ

தமிழ்த்தாய் வாழ்க

சென்னைமாநில முதலமைச்சர்,

ச. இராசகோபாலாச்சாரியாரவர்களிடத்து

வெண்கோழியுய்த்த

# காக்கைவிடுதூது

[இத்தூது புறப்பொருள்பற்றிய தூதாம். அண்டங்காக்கை யென்பது அரசனைக்குறித்த பெயர்களுளொன்றாகலான் அப்பெயருடைமை பற்றி இவண் தூதுசென்றார் பறவையரசாய காக்கையாரெனக்கொள்க. அரசரிடத்துப் பார்ப்பார் தூதுசேறல் பழையவழக்காக அதற்கு மாறாக இற்றைஞான்று பார்ப்பாரிடத்து அரசர் தூதுசெல்லும் இன்றியமையாமை நேர்ந்ததென்பதனை இத்தூதுகொண்டு துணிக.]

வானுயரும் புள்ளாகி மாநிலத்தோ ரன்புசெயத்
தானமரு நல்ல தனுப்படைத்து—மேன்மையாற்

பெற்றகரு மேனிகொடு பேருலக மெங்கணும்
உற்றுயிர்கா வென்ற வுரையளித்து—வெற்றிகொண்

டெல்லார்க்குங் கோவாய் இருந்தமிழே பேசியுல
கெல்லாந் தமிழ்கூறு மேற்றத்தாற்—பல்லோரும்

தாமுண்ணு முன்னர்த் தனைநினைந்தவ் வின்னடிசில்
ஏம முடனேற்க வென்றுரைக்கும்—சேமமுற்றுத்

தாமரையான் மாயன் தலைவரிவர் போற்றவுடன்
வாம மயில்வைத்த வள்ளலுமொத்—தேமமாய்த்

தன்னினத்தை யெல்லாமூண் டானுண்ணும் வேளையில்
இன்னுரையா லேயழைத் தின்பூட்டித்—தன்னுடனே

ஒக்கவுணத் தூத்தமிழர் ஒப்புற வீதென்னத்
தக்க செயலாற் றலைநின்று—மிக்கவைசெய்

தென்னாட் டினுக்கு மியற்கையின் முற்றேன்றும்
முன்னுடு தென்னுடா முண்மையும்—அந்நாடொட்
டிந்நாட்டா ரென்று மியம்பு மொழிதமிழென்
றிந்நா னிலத்தோ ரிசையவே—எந்நாளும்

அம்மா வெனவழைக்கும் ஆன்கன்று மற்றதனைத்
தம்மாசை யாற்றெருடருந் தாயும்பார்த்—தெம்மவர்கள்
ஆவி யுருகா ரணுவளவு மென்றவரை
மேவி வெகுளியான் மெய்கருகிப்—பாவியீர்

தேனேயுஞ் செந்தமிழைத் தீயவர்க டம்மொழியால்
வீணே சிதைக்க விரையுமுன்—ஆனுதிங்
காவாவென் ருர்த்தெழுமி னென்றவரைக் கூவியே
காகாவென் றேலமிடுங் காக்கையே—மாகாதல்

தாய்த்தமிழிற் கொண்டார் தலைமைசே ருன்போல
ஏத்து புகழோரை யான்காணேன்—ஆர்த்த
கடலுண் குறுமுனிவன் கையகத்துக் கொண்ட
குடநீர் தனைக்கவிழ்த்துக் கொட்டித்—தடமண்டு

காவிரியா றாக்கிக் கருணையாற் செந்தமிழர்
ஆவி யளிக்கு மருமருந்தே—தேவர்கோன்
வானுலகந் தன்னை வளர்த்திடுவா னுயினுநீ
தானருணீ ராலே தகைபெற்றான்—தேன்போன்ற

வண்டமிழைக் காக்கும் மரபானு மானிலத்தோர்
அண்டங்காக் கையென்ன வாயினுய்—மண்டு
நிறத்தைக் கருதாது நின்பெருமை நின்னை
யுறவே கருங்காக்கை யென்ப—திறல்சேர்

கருமைநிறந் தானுங் கடவுளமைத் திட்ட
பெருமை யடையாளப் பேரே—உருவார்ந்த
பார்வதியும் மாலும் பகர்கருமை பெற்றதனுற்
பேரழகும் ஆண்மையும் பெற்றுயர்ந்தார்—தேரின்

கருமுகிலு மற்றுன் கருணைநிறங் காட்டி
அரிதி னுலக மளிக்கும்—இருகண்க

னூற்ற வுனக்கொருக ணேயென் றுலகத்திற்
குற்ற முடையார் குறிப்பரால்—மற்றதுவும்

ஒப்பற்ற கண்ணுடையா யென்றிடுமிவ் வுண்மையைச்
செப்பிடுவ தென்றறிஞர் செப்புவரா—லிப்புவியில்

மக்கள் தமைவருத்த வன்சனியொ டுற்றுறையு
மொக்க லெனவே யுனைப்பழிப்பர்—மிக்கவன்றான்

மாந்தர் தமைவருத்த வல்விரைந்து செல்லாமல்
ஏந்தவன்ற னூர்தியா யெய்தியே—தேர்ந்துனது

தந்திரத்தி னாலவனைத் தாறுமா றுயிழுக்கும்
இந்த விரகறிவார் யாவரோ—விந்தையுறக்

காலை யெழுந்து கரைந்து துயிலுமுயிர்
மாலை யகற்ற வருமணியே—சீலத்தால்

வீந்த வுடலை விரும்பும் விரதி,யுயிர்
சார்ந்த வுடலூண் தவிர்தல்போல்—சேர்ந்தவுயிர்

மாண்ட வுடலை யயின்று வளர்ந்துலகில்
வேண்டு முயிரளிக்கு மேதகையாய்—ஈண்டுன்

பெருமையெலாஞ் சாற்றப் பிறங்குயிரா லாமோ
உரிய துனக்கொன் றுரைப்பன்—இருநிலத்துக்

"கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே யெவ்வுயிர்க்கு
முற்றோன்றி மூத்த குடி" நிலைத்துப்—பிற்றோன்றும்

பேரறிவுக் கெல்லாம் பிறப்பிடமாய் முன்னரே
சாரும் பெரிய தகவுடைத்தாப்—பாரின்கண்

மக்களெலாந் தோற்றி மறைகுமரி கண்டந்தன்
தெற்க ணமைந்த சிறப்பினைப்பெற்—றாற்கா

வடவெல்லை வேங்கடமா மன்னியகீ ழெல்லை
தொடுகடலாத் தொன்றுமுதிர் பௌவம்—அடலரணும்

மேலெல்லை யாக விரிந்தொளிருந் தென்னாட்டில்
சால்புங் குணனுந் தகப்பெற்ற—மேன்மக்கள்

இன்னாசெய் யாமை இயல்வ பரிந்தளித்தே
ஒன்னாரை யும்போற்று மொட்பம்பெற்—றிந்நிலத்தில்

ஆதரவற் றிங்க ணடையுமவர் தங்களைக்
காதலாற் போற்றுங் கருத்தினால்—ஓதுலகில்

எவ்வூரு மெம்மூரே யாவரு மெம்மவரே
செவ்விதிற் றெய்வமு மொன்றேகாண்—அவ்வப்

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யா"னென்னும்—மெய்யுரையைப்

பொன்னேபோற் போற்றவுடன் புத்துணர்வைத் தந்தொளிரும்
தன்னே ரிலாத்தமிழே தம்முயிரா—மன்னிய

வாழ்வி னுயர்வெல்லாம் வண்டமிழாற் றம்மிடம்
சூழ வருவ தெனச்சூழ்ந்தே—ஆழ்திரையிற்

போந்தபெரு நாட்டைப் பொருட்படுத்தா திந்நிலத்திற்
றீந்தமிழே தத்தம் செவிமாந்தப்—போந்திருந்து

மூவேந்தர் போற்றவுயர் முச்சங்கப் பாலூட்டித்
தேவ ரறியாத் திறமளித்து—மேவரும்

தாயெனவே போற்றுந் தனித்தமிழை முன்னாளிற்
றூய்மைபெறு வாரியர்தாந் துன்னியே—வாயினால்

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்"டிருந்தும்—சீரிய

நக்கீரர் தாமிலரால் நாமெதையுஞ் செய்வோமென்
றுெக்க வுரைத்தூங்கொண் டாரியத்துண்—மிக்க

சிதைவுமொழி யாமம்பைச் சிந்தித் தமிழிற்
புதையம்பிற் புண்படுத்தி னார்கள்—அதுநிற்க

செந்தமிழ்சேர் சேலத் தினையடுத்த வூரின்கண்
முந்தையங் கார்தம் முதன்மரபில்—வந்தே

இராசகோ பால னெனும்பெயர்பெற் றியாரும்
பாவுமோ ராச்சாரி யார்தாம்—இரவும்

பகலு முழைத்தே படித்தாங் கிலத்திற்
றகவார் வழக்கறிஞ ராகி—மிகவும்

உலகமதி விந்தியநா டிவ்வெள் ளையரால்
பலவு மிடுக்கட் படுமோர்—நிலையுணர்ந்தே

நெஞ்சமுளைந் தந்நிலைமை நீக்க நினைந்துளத்தே
அஞ்சாமை பூண்டோ ரறிவுரையை—எஞ்சாத

இந்தியருக் கெல்லா மெடுத்துரைத்து வெள்ளையர்கள்
வந்த வழிபோம் வகையதுவே—சிந்திக்குந்

தன்னாட்சி மன்றத்தார் தம்முடனே கூடியதாற்
றென்னாட்டுக் காந்தியெனச் செப்பப்பெற்—றிந்நாட்டில்

சாதி யுரங்கொள் தனிக்குடியிற் றான்பிறந்தும்
ஓது புகழ்பெற் றொளிரவே—வேத

நெறிகடந்து, தான்பெற்ற நேரிழையைக் காந்தி
பெருமகனார்க் கீந்து பிறங்கி—அறுதொழிலை

அறவே மறந்துபோந் தாங்கிலர்க டம்மை
இறையி லொழிப்பதற் கேற்ற—முறையுன்னிச்

சட்டங் கடக்கத் தமிழர்களைத் தூண்டியே
சட்டப் படுத்துங் கடுஞ்சிறையில்—விட்டடனுய்த்

தானுஞ் சிறைபுகுந்து தம்மவரைக் காத்தளிக்கும்
மேன்மைக் குணமே மிகப்படைத்திங்—கானுத

வெள்ளையர்க டம்மை விரட்டி யடிப்பதுடன்
எள்ளியவ ரீந்த இழிவாசைக்—கொள்ளத்

தகாத வகையாம் தகர்த்தெறிந்து மற்றோர்
புகாத வழியாற் புரக்க—மகாத்மா

காந்தியெமை யேவினர் காங்கிரசார் யாமென்னச்
சூழ்ந்த வுரைகள் பலசொல்லி—மாந்தர்களை

மஞ்சளெனும் பேரால் மயக்குறுதீப் பெட்டியினில்
வஞ்சனையால் வாக்களிக்க வைத்ததனுல்—விஞ்சியே

தந்திரத்தி னாலே தமிழர்களை யேய்க்கமுதன்
மந்திரியாய்ச் சென்னைமா காணத்தே—வந்தமர்ந்து

சக்ரவர்த்தி யென்று தனையுலகோர் கூறுதலால்
தக்க வரசாய்த் தனைநினைத்து—மிக்க

உழைப்பு முரானு முடையதமிழ் மக்கள்
தழைக்க விருக்கு மிடத்தே—பிழைப்பினுல்

எல்லைகடத் தப்பெற்ற ராசனெனுந் தம்மவரைக்
கொல்லைப் புறவழியே கொண்டுவந்தார்—வல்லவெழிற்

சீருஞ் சிறப்புமுடைச் செந்தமிழை யிந்நாட்டோர்
ஆர்வ முறப்பயிலா தாங்கிலமாம்—பேர்சொல்

பிறர்மொழியைத் தத்தம் பிழைப்புன்னிக் கற்றே
அறவே தமிழ்தெரியா ராகி—உறுதமிழிற்

கட்டாய மின்மையாற் கண்ணூற் றுவர்களுள்
எட்டுப்பேர் கூட எழுத்தறியா—மட்டிகளாய்த்

தங்களுணர் வின்றித் தமிழர் நிலைகுன்றி
எங்கு மடிமைகளாய் வாழ்நாளி—லிங்கு

தமிழெனவொன் றில்லையேல் தம்மடியின் கீழே
தமிழரெலாஞ் சார்வரென் றுன்னி—இமிழ்திரைநீர்

சூழ்ந்த வுலகின்கட் டுய்மைபெறுச் சொற்களைப்பெற்
றேய்ந்தா ரியத்தி னிழிசொல்லாய்—வாய்ந்து

உருதுமுதற் பன்மொழியி னுற்றிடுசொற் பெற்றுக்
கருது மிலக்கியக் கண்ணற்—றெருபொழுதும்

இந்நாட்டார்க் கேலா திழிவுதரு மிந்தியைத்
தென்னாட் டவர்தம் சிறுமைந்தர்—முன்னுன

அங்கிலத்தி னோடே யவசியமாய்க் கற்றற்குத்
தங்கியதோர் திட்டந் தனைவிதித்தார்—இங்குற்

றருந்தமிழ ரெல்லாரு மஞ்சியொன்று கூடிப்
பொருந்து பலகிளர்ச்சி செய்தே—வருந்துமிந்தி

எம்மைந்தர்க் கென்று மிளவயதி லேலாதால்
அம்மைத் தமிழு மழியுமால்—செம்மையிலா

இத்திட்டஞ் செந்தமிழர்க் கேற்புடைத்தன் றென்றாற்ற
அத்தகையோர் தம்மை யறிவிலியென்—றெத்திறத்தும்

தன்னே ரிலாப்பெரியார் தம்மை யிழித்துரைத்தே
எந்நாளு மாறா வசையுரைத்து—முன்னது

தானுரைத்த கட்டாய விந்தி தனையெதிர்க்கு
மேன்மைத் தமிழர்களை வெஞ்சிறையிற்—றான்வைத்தார்

சாதிப் பிரிவைத் தகர்த்து மெனவுரைத்தோர்
மேதினியி லப்பிரிவை மேலாக்க—மேதக்க

தச்சரெலா மாச்சாரி சார்விசுவ பார்ப்பனரென்
றுச்ச நிலைப்பெயரை யோதாமல்—நிச்சலும்

ஆசாரி கர்மாவென் றூரு முரைக்கவே
பேசப் படல்வேண்டு மென்றதனைக்—கூசாது

திட்டப் படுத்தி, அவர் சீற்றங் கொளஅஞ்சிக்
கட்ட மடைந்ததனைக் கைவிட்டும்—ஒட்டாத

தமிழ வழக்கறிஞர் தம்மவரொ டொத்து
மகிழு முயர்நிலையின் மன்னு—தமிழவே

தேர்வு நிலைமாற்றிச் சீறி யவர்வரவே
ஆர்வங் குறைந்தே யடங்கியும்—பார்மேல்

மதிப்பிழந்த விந்தமுதன் மந்திரியார் நெஞ்சங்
கொதிக்கும் வகைகொடுமை செய்ய—விதிர்ப்புற்றுக்

கண்ட துறவியருங் கன்றி யிளகியுளம்
விண்டு கடுஞ்சிறையில் மேவினர்—தொண்டர்கள்

பன்னூற் றுவரும் பகர்புலவ ருஞ்சிறையிற்
றுன்னி யழிந்து துளங்குகின்றார்—இந்நிலையில்

தாய்மார்க ளெல்லாருந் தத்த முளம்பொறார்
சேயோ டடைந்து சிறைபுக்கார்—தாய்மொழியில்

காதல்மிகப் பெற்றதனாற் கன்னி யிளந்தமிழ்நன்
மாதர் மழலைக் குழவிகளோ—டோதுலகில்

சிறைபெற்ற விந்நிலைமை செந்தமிழ ரன்போர்
அறியப் பெறாரின் றறிந்தார்—மறைகற்றுப்

பஞ்சாங்கஞ் சொல்லிப் பொருள்பறிக்கும் பார்ப்பார்தம்
நெஞ்சங் கருங்கல்லோ நீண்மரமோ—வஞ்சகத்தில்

ஆக்கி யுருக்கும் அரமோ அருளதனைத்
தாக்குங் கொடிய தனிவாளோ—யார்க்கும்

உரைசெய்ய வொண்ணாதென் றெண்டமிழ ருள்ளங்
கருகி முனிந்து கனல்வர்—மருவியநற்

காக்கைப்பிள் ளாய்! யாம் கடியமுதன் மந்திரியைப்
பார்க்கப் பலரை யனுப்பினோம்—போக்குமவர்

தம்முரைகொள் ளாது தருக்கினிவர்ந் திட்டதனால்
செம்மைத் தமிழர் சிராப்பள்ளி—வெம்மைப்

படைகள் திரட்டிவந்து பைந்தமிழர் நற்போர்க்
கொடிக ளெடுத்துக் குழாமாய்—நொடியதனில்

வாகை கொளவே வழிக்கொண்டார் ஆயினும்
ஓகை யுற்றவேதம் ஒன்னார்பாங்—கேக

விடுதூதொன் றேவி வினையியற்ற நின்றார்
ஒடியா வுளத்திங் குறுநீ—நெடிது நினைந்
தெண்டிசைசேர்ந் திந்த இராசகோ பாலர்தமை
அண்டி யவரை யணுகியே—தொண்டர்

பிறரடிமை நீக்கப் பிறந்துழைத்தே னென்னுந்
திறல்பெற்ற தந்திரியே தேர்ந்த—மறையவரே

யானு மொருதமிழ னென்றுபகர்ந் தெங்கட்குத்
தேனேய் மொழியுரைத்துத் தித்திக்கத்—தான்வந்து
பேசு பெரியீர் பெரும்பதவி பெற்றதனால்
ஆசை மறைக்க அறிவழிந்தீர்—நாசமுறு
சாதி யுரங்கொள் தகையுடையீர் யிந்நாள்நும்
பேத மறியாத் தமிழன்பை—ஓதுலகில்

குட்டிக் கதையாய்க் குறைத்துப் பழந்தமிழைக்
குட்டிச் சுவராக்கிக் கூறிட்டு—வெட்ட
வெளியாய் விளக்கிடுநல் வீரரே நுந்தம்
ஒளியா வுளத்தை யுணர்ந்தோம்—தெளிவிலீர்
உம்மவர்கள் வாழவுளத் துன்னினீ ராயினுடன்
எம்மவர்கள் வாழ இடமுரைமின்—உம்மையே
நூலா லுலக னொடியி னழியுமென
மேலோ ருரைத்த விதியறிவோம்—மால்கொண்ட
இந்தி யெனுந்தீயா ளின்பத் தினைவிழைந்து
செந்தமிழ்த் தாயின் றிருவுடற்குத்—தந்திரத்தால்

தீங்கிழைத்துச் செந்தமிழர் தம்பகையைத் தேடாது
தேங்கா தவரைச் சிறையகற்றி—ஓங்குபெரும்
அச்சமீக் கூர்ந்தெ மருந்தமிழர்ப் போற்றியே
மெச்சு மவர்முன் விரைந்தடைந்து—கைச்ச
மொழியுரைத்த தீப்பிழைக்கு மும்மடங்கு வேண்டி
அழியா வுளத்தன்பு பெற்றுப்—பழிபோக்கி
உங்குலத்தார்ப் போற்றி யொளிர்சென்னை மாநகரிற்
றங்கு முதலமைச்ச ராயமர்ந்—தெங்கும்
வசைநீங்கி யாரும் வழுத்து மரபால்
இசைபரப்பி வாழுமின், இன்றேல்—நகையினால்
உள்ளத் துயர்தமிழர் உண்மைவழிப் போரியற்ற
ஒல்லையிற் கைதாரு மென்றுரைத்துச்—செல்லவே
வெண்கோழி யென்னை விடுத்ததுகா ணென்றுரைத்து
வண் போர்க்குக் கைவழங்கி வா.

## இந்திமொழிக் கட்டாயமொழிக